**தலவாக்கலை – லிந்துல நகர சபை - 2013**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தலவாக்கலை – லிந்துல நகர சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு புதிய அலுவலகக் கட்டிடத்தின் 432 விடயங்கள் சட்டரீதியாகக் கையேற்கப்பட்டு அந்தச் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 45,129,834 ஆக இருந்தது. அதில் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,141,162 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 78,797 தொகை10 வருடங்களை விஞ்சிய மீதியாகும்.

#### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,449,038 ஆக இருந்தது.

#### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ரூபா 117,231 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

#### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை விஞ்சிய ரூபா 322,919 பெறுமதியான வைப்புப் பணம் இலக்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் படி ஓய்வுபெறச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,085,826 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,696,552 ஆக இருந்தமையால் மிகையில் ரூபா 610,726 குறைவைக் காணமுடிந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2013.01.01 இல் நிலுவை | 2013.01.01 இல் நிலுவையில் அறவீடு | 2013 ஆம் ஆண்டின் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடலில் அறவிடப்பட்டவை | 2013.01.01 இல் காணப்பட்ட நிலுவை | 2013.12.31 இல் நிலுவை<br>2013 ஆம் ஆண்டின் பற்றுச்சீட்டிடல் | 2013.12.31 இல் நிலுவை<br>மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி | 2,399,161 | 702,350 | 6,442,518 | 4,126,396 | 1,696,811 | 2,316,122 | 4,012,933 |
| வாடகை | 488,869 | 37,447 | 3,066,677 | 3,026,228 | 451,422 | 40,449 | 491,871 |

#### 2.2.2 ஆதனவரி

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 4,012,933 ஆகக் காணப்பட்ட மீதியில் 2014 மே 30 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய மீதி ரூபா 2,375,104 தொகையினை அறவிடுவதற்காக நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 170 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பணம் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப் பணம் | 100,834 |
| முத்திரைக் கட்டணம | 82,500 |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

2006 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 131,450 பெறுமதியான குப்பைகளை கூறுகளாக்கும் எக்ரீடெக் மல்டி சொப்பர் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு 07 வருட

காலத்தை விஞ்சியிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது செயற்பாடற்று வைக்கப்பட்டிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிருவாகம்

(அ) கடைத்தொகுதி நிர்மாணம்

முறையான கொள்வனவுத் திட்டம் கடைப்பிடிக்கப்படாது 8 பகுதிகளின் கீழ் நகர சபை ரூபா 15,000,000 மொத்தக் கிரய மதிப்பீட்டில் வணிகசேகர பிரதேசத்தில் கடைத்தொகுதி நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2013 யூலை 20 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2014 மார்ச் 20 ஆந் திகதி பூர்த்தி செய்து கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டு பிரதேசத்தில் சங்கம் ஒன்றிற்கும் கையளிக்கப்பட்ட போதிலும் 2014 மே 31 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தை அமுலாக்குவதில் தாமதம்

செயற்திட்டத்தை அமுலாக்குவதில் நீண்ட தாமதத்தைக் காண முடிந்தது.

### 3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக முறையான திட்டமொன்று பின்பற்றப்படாதிருந்ததடன் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் குப்பைகள் அகற்றப்பட்டிருந்தன.

### 3.4 மிகைக் கட்டணம்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அதிகாரம்) 182(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி பொறுப்புவாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களின் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த மிகைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 7,867 ஆகும்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் படி மதிப்பிடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடுசெய்த போது 07 வருமான விடயங்களில் 8 சதவீதம் முதல் 108 சதவீதம் வரையும், 07 செலவின விடயங்களில் 41 சதவீதம் முதல் 119 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்